1970 செப்டம்பர் 8]

அணுப் பொருள் உற்பத்தித் தொழில் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய வழிவகைகளைப்பற்றி விவாதிப்பதற்காக குறித்த காலத்திற் கொருமுறை அது கூட்டங்கள் நடத்தியது. இச்செயற்குழு தனது அறிக்கையை முடிக்கும் தறுவாயில் உள்ளது. அவ்வறிக்கை விரைவில் அரசிற்கு அனுப்பப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோயம்புத்தூரில் சிறுதொழில்கள் பொருட்காட்சி

* 302 வினு.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகரத்தில் சிறு தொழில்களின் நிலையான பொருட்காட்சி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில் நிலையத்தின் சார்பாக கோவை நகரிலே பொருட்காட்சி அமைக்கப்படுமே யானுல் வருகின்ற பொதுமக்கள் பொருட்காட்சியைப் பார்க்கவும், அரசாங் கத்திலே உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களை வியாபாரம் செய்வதற்கும் வசதியாக இருக்கும். எனவே, அரசாங்கம் அதைத் தொடங்குவதற்கு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிறு தொழில்களிலே உற்பத்தியாகின்ற பொருட்கள் விற்பனையாவதற்கு வசதிசெய்யும்வண்ணம் இப்படிப்பட்ட கண்காட்சிகள் அமைக்கப்படவேண்டுமென்பதைக் கொள்கையளவிலே நம்முடைய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சில இடங்களிலே இதற்கான வசதிகளுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே நாம் பரிசீலித்து எந்த இடத்திலே என்ன என்ன முறை யிலே அமைத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பதைப்பற்றி முடிவு எடுக்கலாம்.

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் ஏற்படுத்தப் பட்டிருக்கிற சிறு தொழில்களிலே என்ன என்ன பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன? அந்தத் தொழிற்சாலைகள் லாபகரமாக நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பெரிய கேள்வியாகப் போடுகிருர்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் தொழில் நடத்துகிருர்கள். யார் யார் என்ன தொழில்கள் நடத்துகிருர்கள் என்று விவரம் இல்லை. ஒவ்வொருவருடைய லாபநஷ்டம் கணக்கு நமக்கு வருவதில்லை. குறிப்பாக, தொழில்களைப்பற்றி பொதுமக்களுடைய நன்மையைக் கருதி கனம் அங்கத்தினர் அவர்கள் சொன் ஞல் அதை அரசாங்கம் பரிசீலிக்கலாம்.

திருப்பூரில் நொய்யலாற்றின் குறுக்கேயுள்ள அணையை உயர்த்துதல்

* 303 வினு.—திரு. சு. துரைச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

[1970 செப்டம்பர் 8

திருப்பூரில் நொய்யல் ஆற்றின் குறுக்கே (ராயபுரம், கருவம்பாளையம்) உள்ள அணையை உயர்த்தி கொடுக்க வேலைகள் துவக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடத்திலே அணையை உயர்த்திக் கொடுத்தால் குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு வசதியாக இருக்கும். எனவே, குடிதண்ணீர்ப் பிரச்னையைப் போக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது குடிநீர் பிரச்னை பற்றியது அல்ல, பாசன வசதி பற்றியது. திருப்பூர் அணைக்கட்டின் உயரத்தை அதைச் சார்ந்துள்ள கிணறுகளின் நீர்மட்ட அளவை அதிகமாக்குவதற்காக மேலும் அதிகரிக்கும் விஷயம் பரிசீலிக்கப்பட்டது. இந்தக் கிணறுகள்கீழ் உள்ள ஆயக்கட்டில் விஸ்தீரணம் 113 ஏக்கர் இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டது. அதில் வருடாவருடம் சராசரியாக 66.15 ஏக்கரிலே விவசாயம் செய்யப்பட்டது. தற்போதைய உயரமே போதும் என்று கருதப்படுவதால் அந்த அணைக்கட்டிலும் விநியோகக் கால்வாயிலும் அவசியமான பழுதுபார்க்கும் வேலைகள் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, நொய்யல் ஆற்றில் வெள்ளக் காலத்திலே தடுப்புச் சுவர் ஆற்றின் குறுக்கே கட்டினல் தண்ணீர் அதிகமாக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது சம்பந்தமான ஏதும் விண்ணப்பம் வந்ததா? அப்படியென்ருல் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா : இதுபற்றி அரசாங்கத்திற்கு எந்த விதமான தகவலும் இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற அணையில் ஒரு அடி தண்ணீர் கூட இருக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. மண் மூடி இருக்கிறது. ஆகவே, நான் பொறியாளரை அழைத்துச் சென்று காட்டி உயர்த்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்தால் ஓரளவு அங்கே தண்ணீர் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அணைக்கட்டுகளையும் கால்வாய்களையும் பழுதுபார்க்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிருர்கள்.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, நொய்யல் பேருக்குப் போகிற வழியில் தண்ணீர் அந்த பாவுகளை எல்லாம் அடித்துக் கொண்டு வருகிறது. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் மராமத்து செய்வதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மராமத்து செய்வதற்கான செய்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.